**கல்னேவ பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஜுன் 26 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 09 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கல்னேவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக் கூற்று 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது இலங்கை பொது துறையின் கணக்கீட்டு தரங்கள் அல்லது பொதுவாக ஏற்றுக் கொண்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் முத்திரை வரி வருமானம் ரூபா 182,050 மீளாய்வாண்டில் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய முத்திரை வரி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான தகவல் அடிப்படையில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் முத்திரை வரி வருமானம் ரூபா 182,050 எனக் கணக்கீடு செய்தமைக்கான காரணம், மாகாண வருமானத் திணைக்களத்தினால் உரிய கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு பெறுமதியை எமக்கு வழங்குவதற்கு அதிக காலம் எடுப்பதாகும். |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபைக்கு கேள்வி அடிப்படையில் குத்தகை ரூபா 384,573 அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 1,710,607 ஆகவுள்ள 8 கணக்கீட்டு விடயங்களுக்கு உரிய விபரமான உப ஏடு மற்றும் வயதுப் பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விபரமான ஏடுகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு என்பனவற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 203 ஆம் அதிகாரம் 2(1) ஆம் பிரிவு | 5,163,870 | சபைக்குச் சொந்தமான பவுஸர் வண்டி, டிராக்டர் மற்றும் டேலர் 02 என்பன பதிவு செய்யப்படாது போக்குவரத்திற்கு ஈடுபடுத்தப் பட்டிருந்தது. | நிதி ஏற்பாட்டிற்கு அமைய செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 1.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய யாதாயினுமொரு பெறுமானம் முற்றாக அல்லது பகுதியளவில் கைவிடப்பட்ட காரணத்தினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவின் படி சபையின் உத்தேச அனுமதி மற்றும் அமைச்சரின் அங்கீகாரம் என்பன பெறப்படாது ரூபா 3,007,357 மீளாய்வாண்டில் வெட்டி விடப்பட்டிருந்தது. | சட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டும். | அனுமதிப்பத்திர கட்டணம், வியாபார வரி, நிலுவை முத்திரை கட்டணம், கைத்தொழில் கடன் பட்டோர், வருமானக் கடன் பட்டோர் என்பனவற்றின் சரியான மீதி இணக்கம் செய்வதற்காக உரிய பெறுமதி புத்தகங்களில் இருந்து வெட்டி விடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,360,892 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,520,361 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,089,000 | 1,106,750 | 1,088,500 | 590,650 | 800,000 | 1,084,600 | 1,084,400 | 573,500 |
| (ii) | வாடகை | 462,000 | 557,500 | 460,300 | 247,578 | 462,000 | 451,500 | 439,722 | 150,378 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,022,900 | 2,329,420 | 2,293,340 | 819,898 | 1,758,750 | 2,431,390 | 2,103,040 | 742,668 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,343,320 | 16,775,264 | 13,326,089 | 9,799,584 | 8,300,900 | 15,033,557 | 15,457,239 | 6,271,309 |
| | மொத்தம் | 16,917,220 | 20,768,934 | 17,168,229 | 11,457,710 | 11,321,650 | 19,001,047 | 19,084,401 | 7,737,855 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஜனவரி 01 ஆம் திகதி ரூபா 7,737,856 ஆகக் காணப்பட்ட மொத்த நிலுவை வருமானம் திசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 11,457,711 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை வெளிப்படுத்தி வீதவரியை அறவிடப்படவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை வர்த்தமானிப்பத் திரத்தில் வெளிப்படுத்தி, வீதவரியை அறவிடுவதற்கு | வீதவரியை அறவிடுவதற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை இனங்கண்டு வீதவரி வலயமாகப் பெயரிடுவதற்குத் |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு 314 அலகுகளுக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை குப்பை வரி ரூபா 590,650 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | உரிய குப்பை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஜனவரி தொடக்கம் மே 30 வரையான காலப்பகுதியினுள் ரூபா 52,550 சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,803,884 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 840,700 ஆகும். | கிடைக்க வேண்டிய கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### 2.2.5 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 734 வியாபார அலகுகளில் அறவிடப்பட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 255,425 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செலுத்தத் தவறுபவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**2.2.6 கைத்தொழில் வியாபார வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 136 வியாபார அலகுகளில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வியபார வரி ரூபா 169,500 அறவிடப்படவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஜனவரி தொடக்கம் மே வரையான காலப் பகுதியினுள் ரூபா 4,700 சேகரிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பல வருடங்களாகக் காணப்படும் மொத்தம் ரூபா 2,042,323 பெறுமதியான 36 இயந்திராதிகள் பயன்படுத்தப்படாது களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களைப் பயன்படுத்த அல்லது அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இச் சொத்துக்களைப் பயன்படுத்த அல்லது அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகை**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஜனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01)(i) ஆம் இலக்க நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |